REGISTERED No. M. 6165. ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாதப் பத்திரிகை.

மே—1962.

விஷயம்.	பக்கம்.
அல்லாஹ் என்னும் ஜெகத் ஜோதி	1
அறச்சுவடி (வித்வான் R. M. காசிம்ஷா M. D. H.)	9
நியாயம் வழங்கிய நீதி மன்னர் (சிறுவர் பகுதி) டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி) ...	11
ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் ஜீவிய சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி)	17
யாஸ்மீன் (தொடர் கதை) (ஏ. ஆர். கமால்)	23
திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி)	29
[illegible] (வித்வான் R. M. காசிம்ஷா M. D. H.)	32

...இஸ்லாம் ஆபீஸ் :
...ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

OFFICE OF THE R...
1962
3L
[illegible]211, N24SI
N62
187088

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம் : இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா 0–13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துட்ர் றப்பானீ வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினு முஹியித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கருமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதி யிருந்த கிதாபை, தமிழில் மொழி பெயர்த்து அரிய முறையில் வெளியிடப்பட்ட பெரிய நூலாகும். கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 3–00

மேற்படி அறபுத் தமிழ் "அல்கன்ஜுல் அப்கம் பீ மனாகிபுல் கவ்துல் அஃலம்" இதன் விலை ரூ. 8–00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

فخرالاسلام

பத்ஹுல் இஸ்லாம்

மே—1962.

‘அல்லாஹ்’ என்னும் ஜெகத் ஜோதி

‘அல்லாஹு தஆலாவை, உள்ளத்தில் வைத்து ஓர்மைப்படுத்தி வணங்குவதே’ அஹ்லே தரீகத்களுடைய உண்மை வணக்கம் என்று சொல்லப்படுகிறது.

ஓர் பொருளை உள்ளத்தில் வைத்துக் காப்பதெனில், அதை எப்படி உருவகப்படுத்துவது என்று தெரிந்து கொள்ள வேண்டும். தாயையும் தந்தையையும், ஞானக் குருவையும் நாம் உள்ளத்தில் வைத்து காக்கும் போது, நமது மனக்கண் முன் அவர்களது திரு உருவம் நம்முன் காட்சி யளிக்கின்றது. இவ்வாறு எந்தப் பொருளை நாம் மனமென்னும் பள்ளியில் வைத்துப் போற்றுவோமோ அதன் உருவத்தோற்றத்தையும் உள்ளக்கமலத்தில் காட்சியளிக்க வல்லதாகக் காண்கிறோம்.

நாம் பிறந்தது முதல் இதுகாறும் கண்ணால் கண்டிராத அரும் பொருளும் கூட சில சமயங்களில் நம்மனக் கண்முன் காட்சியளிப்பதுண்டு. நாம் இதுகாறும் கண்டறியாத மகான்களுடைய திருத் தோற்றத்தையும் சில சமயங்களில் கனவில் கண்டு தரிசிக்கின்றோம். பிறகு நேரில் காண நேரிடும் போது, நாம் கனவில் கண்ட தோற்றமும் இப்போது நேரில் காணும் தோற்றமும் ஒத்தமைந்திருப்பதைக் கண்டு வியப்படைகின்றோம்.

இதெல்லாம் ஆலமே மிதால்,ஆலமே அர்வாஹ் என்னும் ஞான மார்க்கத்தின் அந்தஸ்துகளைக் குறிப்பிடும் உபமேயங்களாகும். "அல்லாஹு தஆலாவை நீ நேரில் காண்பது போல், வணங்கித் தொழுவாயாக; அப்படி முடியாவிட்டால், அவன் உன்னைக் கண்டு கொண்டிருக்கிறுன் என்ற நிர்ணயங் கொண்டாவது தொழுது கொள்" என்பது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் அருள்மொழி பகர்ந்த ஓர் அரிய ஹதீதாகும்.

எனவே, அல்லாஹு தஆலாவைக் காண்பது என்ற விஷயம், அஹ்லெ தரீகத்துடைய வழக்காசாரத்தில் இருந்து வருகிறது. அவர்கள் அல்லாஹு தஆலாவை உருவத் தோற்றமாக இல்லாமல், குணும்சமாக மனக்கண்ணுல் கண்டு தொழுது வணங்குவார்கள். இது எப்படி சாத்தியமாகும்? அல்லாஹு தஆலாவை எந்த தோற்றத்தில் கண்டு தரிசிப்பது என்பது விவாதத்தில் தீராத ஒரு பிரச்னையாக இருக்கின்றது.

ஞான மார்க்கத்தின்படி நடந்த ஆத்மத் தேர்ச்சியாளர்களுக்கு அல்லாஹு தஆலாவே, தன்னைப்பற்றி தானே அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றுன். அதாவது:

அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல்அர்லி...... என்ற ஆயத்து, திருக்குர்ஆனில் ஸூரயே நூரில் அருளப்பட்டிருக்கிறது. இதற்கு "அல்லாஹு தஆலா வானங்களுடையவும், பூமியுடையவும் பிரகாசமாக இருக்கின்றுன்" என்பது வெளிப்படையான பொருளாகும். அந்த ஆயத்தின் முழுக்கருத்தாவது:—

"அல்லாஹ் வானங்களுடையவும், பூமியினுடையவும் பிரகாசமாக இருக்கின்றுன். அவனது பிரகாசத்துக்கு உதாரணம் என்னவெனில், ஒரு மாடம் போன்றதாகும். அதனுள் ஒரு விளக்கு வைக்கப்பட்டிருக்கும். அந்த விளக்கானது ஒரு கண்ணடிப் பேழையினுள் பொருத்தப்பட்டிருக்கும். அந்தக் கண்ணடிப் பேழை, சுடர்விட்டுக் கொண்டிருக்கும் ஒரு நட்சத்திரம் போன்றதாகும். அதன் உள்விளக்கானது தூய்மையான ஜைத்தூன் விருக்ஷத்து (எரிபொருளால் எரிந்து) ஒளி தந்து கொண்டிருக்கிறது. (சூரியன் சந்திரனைப்போல்) அந்தப் பிரகாசம் கிழக்கு திசையை நோக்கியதாயுமில்லை; மேற்குத் திசையை நோக்கியதாயு

187088

மில்லை; அதன் (அபூர்வ) எரிபொருள் தொடும்போதெல்லாம் அது பிரகாசம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். ஆயினும், அதனை(க் கொஞ்சம்கூட) நெருப்பு (உஷ்ணம்) தீண்டுவதே இல்லை. பிரகாசத்தின் மேல் பிரகாசமாய் (அது ஜொலித்துக் கொண்டு) இருக்கும். இங்ஙனம் அல்லாஹு தஆலா, தான் இஷ்டப்பட்டவர்களுக்கு ஞானப்பிரகாசமாக சன்மார்க்கத்தை (ஹிதாயத்தை) அளித்துக் கொண்டிருக்கிறான். இவ்வாறாகிய (ஒளி விளக்கு எண்ணெய், விருக்ஷவித்து, மாடம், கண்ணாடிப்பேழை) போன்ற (ஸ்தூல) உதாரணங்களை (பாமர) ஜனங்களுக்கு அல்லாஹு தஆலா எடுத்துக் காட்டுகின்றான். மேலும் அல்லாஹு தஆலா, சகல விஷயங்களையும் (சகல பொருட்களையும்) நன்கறிந்தவனாக இருக்கின்றான்"

(ஜுஸ்உ: கத்அப்லஹ; ஸூரா: அந்நூர்; ஆயத்து 35.)

எல்லாம் வல்ல பரஞ்சோதிச் சுடர்மணியாகிய அல்லாஹு தஆலா, உலகப் பாமர மக்களுக்கு தன்னைப்பற்றி எடுத்துக்காட்ட, இந்த ஆயத்தில் 'நூர்' என்றும், 'மிஷ்காத்' என்றும், 'மிஸ்பாஹ்' என்றும் 'ஜைத்தூன்' என்றும், 'கவ்கப்' என்றும் பாமர மக்கள் அறிந்துள்ள அகராதிப் பதங்களைக் கொண்டே—தன்னுடைய ஒளிமயமான தோற்றத்தைக் காட்சிக்குரிய காட்சிப் பொருளாய் சமைத்துக் காட்டித் தருகின்றான்.

உதாரணமாய், உத்தமமான மனிதனை நாம், 'அவன் ஒரு மாணிக்கம், அவன் ஒரு ஜவ்ஹர், அவன் ஒரு முத்து' என்று உபமானம் கூறுகிறோம். ஆகவே, சகல சிருஷ்டிகளிலும் உயர்வான மனிதன், கேவலம் விலைமதிக்கக்கூடிய மாணிக்கமாகவும், வைரமாகவும், முத்தாகவும், மணியாகவும் மாறிப்போய் விடுகின்றானா? இல்லை. உபமானத்துக்காக அறிமுகமான ஒரு பொருளைக் கொண்டு ஒப்புவமை கூறப்படுகின்றது.

இம்முறையில், நெஞ்சில் உறையும் மெஞ்ஞானச்சுடராகிய அந்தப் பரம்பொருளான அல்லாஹ்வுக்கு, எதைக் கொண்டு உதாரணம் கூற முடியும்? "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" நிறைந்திருப்பது எது? ஜெகத்ஜோதியாய் துலங்குவது எது? கிழக்கிலிருந்து உதித்து மேற்கில் மறையும் சூரியனைவிட சிறந்த ஜோதி எது? மேற்கில் உதிக்கும் பிறையைவிட மேலான ஜோதி

எது? அல்லாஹ்வுடைய 'நூர்' என்னும் ஒளிப்பிழம்பேயாம். அல்லாஹ் என்னும் 'நூர்' அஸ்தமித்து விடாது; மங்கி விடாது; குறைந்து விடாது; எண்ணெய் (எரிபொருள்) தீர்ந்து போனால், அணைந்து விடாது; மாடத்திலுள்ள விளக்கு எதிர்பக்கம் மட்டும் தான் சுடர் பரப்பும்; பின்புறத்தில் பிரகாசிக்காது. ஆனால், அல்லாஹ்வுடைய நூர் என்னும் பிரகாசம் கிழக்கென்றில்லாமல், மேற்கென்றில்லாமல், தெற்கென்று இல்லாமல், வடக்கென்றில்லாமல் மேல்—கீழ், உள்—புறம் என்று வரன்முறை இல்லாமல் எங்கும் எப்போதும் எண்டிசையும் மெய்யொளி பரப்பி, பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.

'அல்லாஹ் ஒளிமயமாக இருக்கின்றான்' என்று தத்துவ ஞானிகள் கூறி விடுகின்றனர். அல்லாஹ் நூராக இருக்கின்றான் என்று ஆத்மஞானிகள் கூறுகின்றனர். அல்லாஹு தஆலாவுக்குரிய (99) ஒன்று குறைய நூறு திருநாமங்களில் "அந்நூர்" (பிரகாசம், ஜோதி, சுடர், ஒளி) என்பதும் ஒன்றாகும்.

வானங்களிலும் பூமியிலும் நிறைந்திருக்கும் ஒளி எது? அதைக் கண்ணால் பார்க்கமுடியுமா? அறிவினால் அறிய முடியுமா? உணர்வினால் ஸ்பரிசிக்க முடியுமா? முடியாதென்றும் சொல்ல வேண்டாம். முடியும் என்றும் சொல்ல வேண்டாம். அவரவர் மெஞ்ஞான ஆத்மார்த்த சக்திக்குத் தக்கபடி அவரவரும் அல்லாஹ்வை மனக்கண் முன் ஒளிமயமாய் கண்டு தரிசித்துக் கொண்டு தானிருக்கின்றனர்.

'ஒரு ஒளி, எங்கும் எப்பக்கமும் எப்பொருளிலும், எவ்வுள்ளத்திலும், எண்டிசையிலும் காட்சியளித்துக் கொண்டிருக்க முடியுமா?' என்று ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டு, அதற்கு நம் உலகில் உள்ள ஒரு பிரகாசத்தைக் கொண்டு உதாரணம் கூறலாம்:

அன்பீர், மின்சாரம், எலக்டிரிக், மின்னொளி, பவர் என்ற பதங்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இக்காலை பட்டணங்கள் மட்டுமில்லை; காட்டுப்புறங்களில் கூட மின்னொளி விளக்கு ஏற்பாடு நம் அரசாங்கத்தாரால் செய்யப்பட்டிருக்கிறது. மின்சாரக்கம்பி மூலம் வீடுதோறும் எலக்டிரிக் பல்புகளும், டியூப் லைட்டுகளும் எரிந்து ஒளிப் பிரகாசம் தந்து கொண்டிருக்கின்றன.

எங்கோ மேட்டூர் அணையிலிருந்து மின்சார சக்தியைத் திரட்டி கம்பிகள் மூலம் எங்கெங்கோ கொண்டுபோய் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். நாட்டு நகர ஜனங்கள் அதைப் பெற்றுப் பலப் பல வகையில் உபயோகப்படுத்தி வருகிறார்கள். அந்த மின்சார ஒளியானது விளக்கு எரிக்கவும் உபயோகமாகிறது; அடுப் பெரிக்கவும் உபயோகமாகிறது; இருப்புப் பெட்டியிலுள்ள பழம் பண்டம் முட்டை முதலியவைகளுக்கு குளிர்ச்சி தந்தும் காப்பாற்று கிறது; கிராமபோன்—ரேடியோ பெட்டிகளில் புகுந்து காதுக்கு இனிமையான சப்தங்களையும் ராகங்களையும் ஒலி பரப்பவும் அந்த மின்னொளி உபயோகப்படுகிறது. சுருங்கக் கூறுமிடத்து, சிகரெட் டுக்கு நெருப்பு பற்றவைக்கும் சிறு வேலை முதல் மாபெரும் தொழிற் சாலை இயந்திரங்களை இயங்க வைக்கும் காரியம்வரை மின்சாரம் என்னும் ஒளி உபயோகப்பட்டு வருகிறது

இன்னும் இயற்கை நியதிப்படி மின்னொளியானது பிரபஞ்சம் எங்கும் பரவி வியாபித்து நிறைந்திருக்கிறதென்றும், அதை மனிதன் விஞ்ஞான அறிவு கொண்டும் தகுந்த கருவி கொண்டும் வசப்படுத்த முயன்றால் அது கைக்கூடி பலன் அளிக்கிறதென்றும் கூறுகின்றனர். ஆகாயத்தில் இடி முழங்கி மின்னும்போது மின்சார ஒளியைக் காணுகின்றோம். அணைக்கட்டுத் தண்ணீரிலிருந்து மின்சாரம் எடுப்பதைக் காணுகின்றோம்; நல்ல வெய்யிலின் கிரணங் களிலிருந்து மின்சாரம் உற்பத்தி யாவதைக் கேள்விபடுகின்றோம். எனவே மின்னொளி பரவியிராத எந்தப்பகுதியும் எந்தப்பொருளும் பிரபஞ்சத்திலோ, விண்ணிலோ, வானிலோ இல்லை என்று கூறி முடிக்கலாம்.

எனவே, அங்ஙனம் பரவி வியாபித்து, மறைந்தும், வெளிப் பட்டும், இருந்தும், இல்லாதிருந்தும் தன் அபூர்வ சக்தியை வெளிப் படுத்திக் கொண்டிருப்பதையே, "அல்லாஹ் என்னும் நூர்" என்று மெஞ்ஞானம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர். வானங்களிலும், பூமியிலும் பாவி யிருக்கும் பேரொளியாகிய நூருக்கு, அல்லாஹ் தன்னை ஒப்பிட்டுக் கூறிக் கொள்கிறான்.

ஆகவே, அல்லாஹ் ஒளியல்ல; ஒளி அல்லாஹ் இல்லை; ஆனால் அல்லாஹ்வின் ஒளி அனைத்திலும் ஊடுருவிப்பாய்ந்து பரவி வியா

பித்திருந்து, சகலத்தையும் இயங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

அல்லாஹ் 'தாத்' என்னும் முறையில் தனித்து இலங்கும் தன்மையுள்ள அஹதாகவும், அஹ்தியத்தாகவும், வாஹிதாகவும் இருக்கின்றான். அவன் 'ஸிபாத்' என்னும் முறையில் வெளிப்பட்டு (பாத்தினிலிருந்து லாஹிராகி) வியாபிக்கும் முறையில் ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு ஜடத்திலும் அங்கிங்கென்னுதபடி எங்கும் பிரகாசமாய் வியாபித்து 'ஷுஹூது' என்னும் காட்சி யளிக்கின்றான். எனவே, உலகத்தில் எந்தப் பொருளிலும் ஷையிலும், ஆரிபீன்கள் என்னும் மெஞ்ஞானிகள், அல்லாஹு தஆலாவுடைய உஜூதைக் காணுகின்றனர். எனவே அல்லாஹு தஆலாவை அவர்கள், தீச்சுடர் இல்லாத குளிர்ந்த ஜெகத் ஜோதியாய் கட்புலனுக்குத் தெரியாமல் வெளிக்கண்ணுக்குத் தெரியாமல் மனக்கண்ணுக்கு மட்டும் தெளிந்துத் தெரியும் நூராக (ஒளியாக) அல்லாஹு தஆலாவின் திருத்தோற்றத்தை, ஆத்மார்த்தமாய் தரிசித்துப் பேரின்பம் அடைகின்றனர். ஒவ்வொரு உண்மை ஞானியின் உள்ளத்து (பல்ப்) விளக்குக்கு ஒளி (மின்சாரம்) அளிப்பது அல்லாஹுஹ்வின் நூரேயாகும். எனவே அல்லாஹ்வை ஒளிமயமாக நூருன் அலா நூராக பாவித்துப் பரம திருப்தி கொண்டு தொழுது துதித்து இன்புறுகின்றனர்.

'நூர்' என்பதற்கு 'ஹிதாயத்' (நேர்வழி, சன்மார்க்கம்) என்றும் ஒரு பொருள் உண்டு. இதை முன்னிட்டு சன்மார்க்கப் பெரும் பொக்கிஷமாய் விளங்கும் நம் திருமறையான குர்ஆன் ஷரீபுக்கும் 'நூர்' என்ற பெயர் உண்டு.

"அல்லாஹ்விட மிருந்து உங்களுக்கு (ஹிதாயத்து என்னும்) ஒளியும் (குர்ஆன் என்னும்) விளக்கமான வேதமும் வந்திருக்கின்றன......(அல்மாயிதா)

இங்கு அல்லாஹு தஆலா திருவுளமா யிருப்பதில் உள்ள 'நூர்' ஹிதாயத் என்பது சன்மார்க்கத்தை குறிக்கும். இப்பிரகாசம் இரண்டுவகைப் பட்டதாகும். ஒன்று கண்ணால் காண்பதற்கு உதவியாக இருக்கும் பிரகாசம். மற்றொன்று மனக்கண்ணால் கண்டு தெளிவதற்கு உபயோகமாக இருக்கும் 'ஹிதாயத்' என்னும் பிரகாசம்.

இரண்டு விதமான ஒளிகளும் மார்க்கத்தைக் காண்பிப்பவை களேயாகும். இரவு காலங்களில் ரோடுகளிலும் பாதைகளிலும் அரசாங்கத்தாரால் நிலை நாட்டி வைக்கப்படும் விளக்கு ஒளிகளால், போக வேண்டிய நேர்பாதைகளை நாம் தெரிந்து கொண்டு போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போகின்றோம். பகற்காலங்களில் சூரியன் வெளிச்சமாகிய இயற்கை பிரகாசம் நமக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறது. இருட்டி விடும்போது நம்முடைய புலக்கண்களுக்குப் பாதை தெரிவதில்லை. அப்போது விளக்கு வெளிச்சம் தேவைப்படுகிறது. இவ்வாறே மாந்தரின் ஹிருதயம் என்னும் உள்ளம், அஞ்ஞானம் என்னும் இருளினால் சூழப்பட்டு விடும்போது, மாந்தருக்கு சன்மார்க்கம் எதுவென்று தெரிவதில்லை. இருட்டில் குருடன் தட்டுத்தடமாறிச் செல்வதைப் போல் அஞ் ஞானியானவன், கால் போகும் போக்கில் கண் மூடித்தனமாய், குருடன் செல்வதைப்போல், ஒழுக்கங் கெட்டு, குணம் கெட்டு, நடத்தை கெட்டு கெட்டுழல்கின்றான். அப்படிப்பட்ட சமயத்தில், ஞானக்குருவினால் மொழிந்தருளப்படும் ஞான உபதேசமென்னும் 'நூர்' உதவி செய்கின்றது. இந்த ஞான ஒளியினால் மனக்கண் திறந்து இறைவனின் நல்லருள் என்னும் நேர்பாதை தெரிய வரு கிறது. அந்தப் பாதை வழியே சென்றால் ஆத்மார்த்தமாய் நாம் அடைய வேண்டிய குர்பையும் விகாவையும் அடைகின்றோம். நமக்கு இம்மார்க்கத்தில் வழி காட்டும் ஹிதாயத்து, இகத்திலும் பரத்திலும் நம்மை கடைத்தேற்றிக் கொள்கிறது. மனமென்னும் அந்தரங்கத்தைப் பிரகாசப்படுத்துவது நூரே பாத்தினியாகும். வெளிப்படையான ஷரீஅத்து முறையில் நாம் நடந்து கொள்ளும் நடவடிக்கைக்கு 'நூரே லாஹிரி' என்று பெயர் சொல்லப்படும். இந்த இரண்டு வகையான ஒளிப்பிரகாசங்களும் நமது தீனுல் இஸ்லாத்தில் அமைந்திருக்கின்றன.

வானம், பூமி, மலை, கடல், திடல், சூரியன், சந்திரன், நட்சத் திரங்கள் எல்லாவற்றையும் படைப்பதற்கு முன், அல்லாஹுத் தஆலா ஜோதிமயமாகவே இருந்தான், நூர் ஆகவே இருந்தான் என்று சொல்லப்படுகிறது. அல்லாஹுத் தஆலா ஆதியில் 'மறைபொரு ளாக' (கன்ஜே மக்பீயாக) இருந்தான். பிறகு முதன் முதலாக தன் சுய ஒளியிலிருந்து 'நூரே முஹம்மதி' என்னும் வெளி ஒளி யைப் படைத்தான்; பிறகு அதிலிருந்தே பிரபஞ்ச மனைத்தையும்

படைத்தான் என்று நம் கிதாபுகளில் ஹதீது சொல்லப்பட்டிருக்கிறது. 'அவ்வலுமா கல்கல்லாஹு நூரி' (அல்லாஹு தஆலா முதன் முதல் என்னுடைய ஒளியையே படைத்தான்) என்று நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

எனவே, அல்லாஹ்வுடைய ஒளியிலிருந்தே, முஹம்மத் உடைய ஒளியும், பிறகு சகல லோகங்களின் ஒளியும் வெளிப்பட்டு காட்சி யளித்தன. அனைத்துக்கும் ஆதிகாரணனான அல்லாஹு தஆலா ஒளிமயமாகவே காட்சி யளிக்கின்றான். கண்ணால் காணும் ஒளி புற ஒளி; மனத்தால் காணும் ஒளி அக ஒளி. அக ஒளியைத்தான் நூர் என்றும், நூருன் அலா நூர் என்றும் ஞானவான்கள் கூறுவர். அதுதான் ஆதி; அதுதான் அந்தம்; அல்லாஹ்வே ஆதி; அல்லாஹ்வே அந்தம்.

ஹுவல் அவ்வலு வல்ஆகிரு; அல்லாஹு அக்பர்.

அறச்சுவடி.

[வித்துவான் R. M. காசிம்ஷா M. D. H.]

தக்கார் மாட்டு தானம் வழங்கு
தாய்மையின் பண்பை தரணியில் கூறு
தினமும் மறையைத் தெளிவாய் ஓது
தீயோர் செயலைத் திருத்தியே வாழு
துன்பம் தொடரா இன்பம் உண்டோ?
தூதினைக் கோறல் கோதினை ஈயும்
தெளிந்த பின்னே நட்பினர் தேர்க
தேய்பிறை போன்ற நட்பும் தீதே.
தைரியமாக தகுமுறை தருக
தொழில்தனில் தாழ்வு தொடர்வது ஏது?
தோற்றம் இன்றேல் ஏற்றம் யாங்கு?
மதிநலங் கொண்டு மனையறஞ் செய்மின்
மாதரின் கற்பே தீதிலா பொற்பு
மிதமே உண்டு இதமாய் வாழ்க
மீமிசை உயர்ந்தோர் பூமிசை உண்டோ?
முறையறிந் தொழுகி குறைதனை நீக்கு
மூமின் ஆகவே மாணித் திடுவாய்
மெதுவாய் நடப்பதும் மெச்சத் தகுந்தது
மேதையர் உரைதனில் தீதுரை இல்லை
மையில் சிறந்தது பொறுமை என்க
மொழிகடை இன்றேல் வழிகடை ஏது?
மோனம் மிகுந்தோன் ஞானம் அறிந்தோன்
மௌனம் கொண்டு மதிவழித் தேரு

தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேதமாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமாயுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர்ஆனின் **தப்ஸீரை** தமிழ் பாஷையில் **ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

முதல் பாகம்: ஸூறத்து பாத்திஹா—பகருவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼ ஜுஸு வரை — விலை ரூ. 10

இரண்டாம் பாகம்: ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய — விலை ரூ. 10

மூன்றும் பாகம்: ஸூறே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்ல் முடிய 7-ஸூறுக்களின் தப்ஸீர் — விலை ரூ. 10

நான்காம் பாகம்: ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் — விலை ரூ. 10

ஐந்தாம் பாகம்: ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். — விலை ரூ. 12

ஆரும் பாகம்: ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். — விலை ரூ. 12

ஏழாம் பாகம்: சூறே காப் முதல் ஸூறத்து காஸ் வரை 65-ஸூருக்கள் — விலை ரூ. 16

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5

நியாயம் வழங்கிய நீதி மன்னர்

டி. எப். ஆர். ம ஆலி சாஹிப் (பாகவி)

பண்டை காலத்தில், அரபு தேசத்தில் ஓர் சுல்தான் அரசாண்டு கொண்டிருந்தார். அந்த மன்னர் பிரஜைகளிடம் அன்பும் நியாயம் வழங்குவதில் அபிமானமும் உடையவர். தன்னுடைய தர்பாருக்குள் யாரும், எந்த ஏழையும் தங்குத் தடையில்லாமல் வந்து, குறைகளை முறையிட்டுக் கொண்டு நியாயம் பெறலாம் என்று பொதுவாக அறிக்கை வெளியிட்டிருந்தார். அதன்படி, எல்லோர் குறைகளையும் விசாரித்து, முறைப்படி நியாயம் வழங்கி வந்தார்.

தினமும் தர்பாரில் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்ததால், கூச்சலும் சந்தடியும் அதிகமாய் இருந்தது. இதற்கு என்ன செய்வதென்று மந்திரிகளிடம் ஆலோசனை கேட்டார். அதற்கொரு மந்திரி சொன்னதாவது :- "அரசே, தங்களிடம் தர்பாரில் குறை சொல்லிக் கொண்டு நியாயம் கோர வருபவர், சிகப்பு உடை உடுத்திக் கொண்டு வந்து, அவர்களுக்குரிய தனி இடத்தில் வரிசையாக நிற்க வேண்டும், அவர்களைத் தாங்கள் நேரில் கண்ணாரக் கண்டு, அருகில் வரச் சொல்லி அழைத்து நியாயம் வழங்க வேண்டும்" என்று யோசனை சொன்னார்.

அதன்படியே புது வழக்கம் ஏற்படுத்தப் பட்டது. எனவே, வழக்கு உடையவர்கள், பணம் செலவிட்டு சிகப்புத் துணி வாங்கி தைத்து உடுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. இப்படிச் செய்து வந்ததில் கூட்டம் குறைந்து, சந்தடியும் சிறிது அடங்கியது.

இப்படி யிருக்கையில், அரசருக்கு, கண் பார்வை குறையத் தொடங்கி விட்டது. தர்பாரில் யார் என்ன உடை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே கண்டு கொள்ள முடியாதபடி, கண் பார்வை முற்றும் கெட்டுப்போய் விட்டது.

கண் பார்வை கெட்டுப் போனாலும் அந்த நல் அரசர், பிரஜைகளை அருகில் அழைத்து, குறைகளைக் கேட்டு நியாயம் வழங்கும் நல்ல வழக்கத்தை விட்டுவிட அவருக்கு மனம் வரவில்லை. எனவே,

மந்திரிகளை நோக்கி, "அமைச்சர்களே, எனக்குக் கண் பார்வை குறைந்து விட்டதே; தர்பாரில் நியாயம் கோரி, சிகப்பு உடை அணிந்து கொண்டு வந்திருப்பவர்களை என்னால் கண்டுகொள்ள முடியவில்லையே, என்ன செய்வது? இதற்கு என்ன பரிகாரம்?" என்று யோசனை கேட்டார்.

அதற்கொரு நல்ல மந்திரி சொன்னதாவது :- "அரசே, தர்பாருக்கு அடுத்துள்ள மணி மண்டபத்தில் ஒரு ஆராய்ச்சி மணியை கட்டித் தொங்க விட்டு விடுவோம். அதிலிருந்து கயிற்றைக் கட்டி வைப்போம். யார் தங்களிடம் குறைகளைச் சொல்லி நியாயம் கோர வருகிறாரோ அவர், அந்த மணிமண்டபத்தில் நின்று ஆராய்ச்சி மணியின் கயிற்றை அசைக்க வேண்டும். அந்த மணியோசையை கேட்டுத் தாங்கள் அங்குபோய், அல்லது அவரை அருகில் அழைத்துக் கேட்டு நியாயம் வழங்கலாம்" என்று ஆலோசனைக் கூறினார்.

அதன் பிரகாரமே அரண்மனையை யடுத்த மணிமண்டபத்தில் ஆராய்ச்சிமணி கட்டி வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் பிரஜைகள் சிகப்பு உடை அணிய வேண்டு மென்ற வழக்கத்தையும் விட்டு, அந்த மணிமண்டபத்துக்கு வந்து ஆராய்ச்சி மணியின் கயிற்றைப் பிடித்து இழுப்பார்கள். மணி சப்தம் கண-கண வென்று ஒலிக்கும். அதைக் கேட்டு அரசர் அங்குபோய் நியாயம் வழங்குவார். அல்லது அந்த வழக்காளியை அருகில் வரவழைத்து விசாரித்து நியாயம் வழங்குவார்.

இப்படி யிருக்கையில் அந்த நல்ல அரசருக்கு, செவிப்புலனும் மங்கிப்போய் விட்டது. அதாவது காது கேட்காமல் செவிட்டுத் தன்மை உண்டாய் விட்டது. நியாயம் கோரி ஆராய்ச்சி மணி அசைப்பவரின் கூக்குரலையும் கேட்க முடியாமல் போய் விட்டது.

இதற்கு என்ன பரிகாரம் செய்வதென்று மீண்டும் மந்திரிகளைக் கேட்டார். அதற்கு ஒருவர் சொன்ன யோசனை :- "அரசே, மணி மண்டபத்தில் கட்டப்பட்டுள்ள ஆராய்ச்சி மணியும் இருக்கட்டும். வழக்காளி வந்து அதன் கயிறை இழுத்து மணியோசை எழுப்பும் வழக்கமும் இருக்கட்டும். அத்துடன் இன்னொரு ஏற்பாடும் செய்ய வேண்டும். அதாவது ஆராய்ச்சி மணியிலிருந்து ஒரு மெல்லிய நூல் கயிற்றை, தங்கள் சிம்மாசனம் வரை கொண்டு வந்து தங்கள் தோள் புஜத்துடன் கட்டிவிட வேண்டும். ஆராய்ச்சி மணிக் கயிறு இழுக்கும்போது, மணியோசை தங்கள் காதில் விழாமற் போயினும், மெல்லிய நூல் கயிற்றின் அசைவால் தங்களுக்கு சமிக்ஞை தெரியவரும். பிறகு தாங்கள் அவரை நேரில்

அழைத்து அல்லது அங்கு சென்று கேட்டு நியாயம் வழங்கலாம்" என்று ஆலோசனை கூறினர்.

இவ்வாறு புதிய ஏற்பாட்டாலும் சிலநாள், அந்த நல்ல மன்னர், பிரஜைகளை ஆதரித்து, தம்மால் இயன்றமட்டும் நியாயம் வழங்கி வந்தார். எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, இந்த சேவைக்காக தன்னருளால் கண் பார்வை மீண்டும் கொடுத்து காது கேட்கும் படிச் செய்ய வேண்டுமென்று, ஐங்காலத் தொழுகையின்போது துஆ கேட்பார். தன்னுடைய ஹக்கில் துஆ கேட்கும்படி மந்திரி பிரதானிகளிடமும், பிரஜைகளிடமும் வேண்டிக் கொள்வார். அவர்களும் இரங்கி துஆ செய்வார்கள்.

இப்படி இருக்கையில் ஒருநாள் அரசர், தாபாரில் அமர்ந்து அரசியல் காரியாதிகளைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது, மணி மண்டபத்தில் ஆராய்ச்சிமணி அசைக்கப்பட்டதால் ஏற்படும் ஓசையை தர்பாரிகள் கேட்டனர். மணிக்கயிற்றுத் தொடர்பு அரசருடைய புஜத்தையும் அசைத்து சமிக்ஞை காட்டியது.

உடனே அரசர், தர்பார் காரியாதிகளை நிறுத்தி விட்டு மணி மண்டபத்தில் மணியசைத்து குறை வேண்டிவந்த வழக்காளி யார் என்று பார்த்து அழைத்து வரும்படி, பிரதானிகளுக்கு கட்டளை யிட்டார். பிரதானி, மணிமண்டபத்தில் போய்ப் பார்த்து அங்கு மனிதர் (பிரஜை) யாரும் இல்லாதிருப்பதைக் கண்டு, திரும்பி வந்து "அரசே அங்கு யாரும பிரஜைகள் காணேம்" என்று கூறி விட்டார்.

மீண்டும் அதே மாதிரி மணியோசையும், கயிறு அசைவும் சமிக்ஞையும் உண்டாயிற்று. அரசர் திடுக்கிட்டு அங்கு தானே நேரில் செல்ல வேண்டி எழுந்து, மந்திரி பிரதானிகள் சூழ்ந்துவர அங்கு மணிமண்டபம் போய்ச் சேர்ந்தார். அரசருக்குக் கண் பார்வை தெரியாததால், ஆராய்ச்சி மணியின் கயிற்றை யார் பிடித்து அசைக்கின்றனர் என்பதை அரசர் காண முடியவில்லை. மணி யோசையும் அவர் செவிடானதால், காதில் விழவில்லை.

மற்ற மந்திரி பிரதானிகளும் அந்த மணி மண்டபத்தில், குறை கோரிக்கொள்ள எந்தப் பிரஜையும் வந்தில்லாததைக் கண்டு ஆச் சரியப் பட்டனர்.

ஆனல், அரசருடைய அவைச் சபையிலே, ஒரு பெரிய வயதான ஹஜ்ரத் பீர் சாஹிபும் இருந்து வந்தார். இந்த ஹஜ்ரத் அங்கு வந்து சேர்ந்து, கண்ணேட்ட மிட்டார். அவருக்கு உண்மை நிகழ்ச்சி என்ன வென்று ஆண்டவன் கிருபையால் விளங்கி விட்டது. அங்கு மணிமண்டபத்தில், ஆராய்ச்சி மணிக் கயிற்று நுனியை ஒரு பெண் மான் கவ்விப் பிடித்து இழுத்துக் கொண்டிருக்

ததை, அந்த ஹஜ்ரத் கண்டு கொண்டார். அதனைக் கூர்ந்து கவனித்து "அல்ஹம்து லில்லாஹ" என்று இறைவனைப் புகழ்ந்தார்.

இதையுணர்ந்து வியப்படைந்த மன்னர், பிரதானிகள், அந்த ஹஜ்ரத்தை யணுகி என்னவென்று விளக்கம் கேட்டார்கள். அதற்கு அந்த ஹஜ்ரத் அவர்கள், அங்கு ஆராய்ச்சிமணி அசைத்த மானிடம் சென்று அதன் முதுகைத் தடவிக் கொடுத்து விட்டு மன்னிரிடம் தெரிவித்துக் கொண்டதாவது :-

"அரசே, அல்லாஹ்வின் பெயரால் தாங்கள், எல்லோருக்கும் நியாயம் வழங்குவதுபோல், வாயில்லாப் பிராணியாகிய தனக்கும் நியாயம் வழங்குவீர்கள் என்று, இந்தப் பெண்மான் தங்களிடம் நியாயம் கோரி வந்து, ஆராய்ச்சி மணியை அசைத்திருக்கிறது. இதற்கும் தாங்கள் நியாயம் வழங்குங்கள்" என்று அந்தப் பெரிய ஹஜ்ரத் சொன்னார்.

மன்னர் இதைக் கேட்டுப் பேராச்சரியப் பட்டார். ஆனால், பெண்மான் என்ன கூறுகிறது என்று எப்படி அவரால் அறிய முடியும்? ஆகையினால், அந்தப் பெரியவராகிய மகானை வேண்டிக் கொண்டு, "ஹஜ்ரத், தாங்கள் முக்காலமும் அறிந்த மகானுபாவர். தாங்கள் அபார ஞானத்தால் சகலவற்றையும் அறிந்துணர்வதுபோல், இந்தப் பெண்மானுடைய பேச்சையும், எண்ணத்தையும் அறிய வல்லீர்கள். ஆகையால் தாங்களே இவ் வாயில்லாப் பிராணியுடன் சம்பாஷணை செய்து எனக்கு விஷயத்தை எடுத்துக் கூற வேண்டும்" என்று மன்னர் வேண்டிக் கொண்டார்

அதற்கு அந்த ஹஜ்ரத் மகான், அந்தப் பெண்மானுடன் சிறிது நேரம் ஆத்மார்த்தமாகவும் மானஸீகமாகவும் முகம் நோக்கி சம்பாஷணை புரிந்து கொண்டு அரசர்க்கு தெரிவித்ததாவது :-

"அரசே, இந்தப் பெண்மான் காட்டில் சுயேச்சையாய் வசித்துக் கொண்டிருந்த பிராணி. இது ஒரு குட்டிக்குத் தாயாகவும் இருந்தது. குட்டியோடு காட்டில் சந்தோஷமாய் வாழும்போது, அதற்கு அரச குலத்தாரால் தீங்கு நேரிட்டு விட்டதாம். அதாவது, அது அருமையாய் பெற்றுப் பாலூட்டி வளர்த்துக் கொண்டிருந்த சிறு குட்டியை, தங்கள் அரண்மனையாட்கள் வனத்தில் வேட்டையாட வந்து, தன்னுடைய அருமைக் குட்டியை, பிடித்துக் கொண்டு போய் விட்டார்களாம். மேலும் அந்த மான் குட்டி தங்கள் அருமைக் குமாரராகிய இளவரசரிடம் கொடுக்கப் பட்டிருக்கிறதாம். அரண்மனையில் இராஜகுமாரன் கட்டிப் போட்டு வைத்திருக்கும் தன் குட்டியைத் தரும்படி இந்த மான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறது. தான் பெற்ற குட்டியை, தாங்கள் பெற்ற குழந்தைக்

காக (இளவரசருக்காக) அபகரித்துக் கொண்டுபோய் விட்டது நியாயமா? என்று இந்தத் தாய்மான் கேட்கிறது. இதற்கு நியாயம் வழங்குங்கள்'' என்று அந்த ஹஜ்ரத் விஷயத்தை விபரமாய் எடுத்துக் கூறினர்.

உடனே அன்புள்ள அரசர் அந்த மானை, முதுகில் தடவிக் கொடுத்து விட்டு, அரண்மனைக்குள் பெண்களும் பிள்ளைகளும் வசிக்கும் அந்தப்புரம போய், மான் குட்டி இருக்கிறதா என்று விசாரித்தறிந்தார். அதற்கு ராணியம்மாள் சொன்னதாவது :—

"ஆம் அரசே. மான் குட்டி நம்மிடம்தான் இருக்கிறது. நம் செல்வக் குமாரன், விளையாடுவதற்கும் வளர்ப்பதற்கும் ஒரு மான் குட்டி வேண்டுமென்று நெடு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்தான். இவ் விருப்பத்தை நான் நம் சேனைத் தலைவரிடம் சொல்லி வைத்திருந்தேன். நேற்று முன் நாள் அவர் வேட்டைக்குப் போயிருந்தபோது, இந்த அருமை மான் குட்டியைப் பிடித்துக் கொண்டு வந்து, நம் செல்வக் குமாரனுக்கு காணிக்கையாகக் கொடுத்தார்'' என்று தெரிவித்தனர்.

இளவரசனும் மான் குட்டியுடன் தந்தையாகிய மன்னரிடம் வந்து உண்மையை எடுத்துரைத்தான்.

அப்போது அரசர், தன் ராணியையும் பிள்ளையையும் பார்த்து "நாம் பிரஜைகளையும் பிராணிகளையும் காப்பாற்றும் மன்னர் குலத்தவராக இருக்கிறோம். இந்தப் பொறுப்பை அல்லாஹு தஆலா நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறான். எனவே, உடனே மான் குட்டியை அதன் தாயிடம் சுயேச்சையாய் விட்டு விடுங்கள். நாம் நம்முடைய சுகத்துக்காகவும் சந்தோஷத்துக்காகவும் பிறரைத் துன்புறுத்துவதோ, பிற பிராணிகளைக் கஷ்டப் படுத்துவதோ கூடாது; அது பாபமாகும். மான் குட்டியும் அதன் தாயும் சுயேச்சையாய் வாழட்டும். அல்லாஹு தஆலா அனைத் துயிர்களிடமும் கருணை கொண்டவன். நம்மீதும் அவன் கருணை புரிவான்'' என்று எடுத்துரைத்தார் மன்னர்.

அதன்படி, மான்குட்டி அவிழ்த்து விடப்பட்டது. அது துள்ளி குதித்துக் கொண்டு, அந்த மணிமண்டபத்திலேயே எல்லோரும் கண்டானந்திக்கும் வண்ணம் தன் தாயின் மடியை முட்டி அன்புடன் பால் குடிக்கத் தொடங்கியது. தாய் மானும் தன் குட்டியை நாக்கினால் நக்கிவிட்டு, அரசரையும் ஹஜ்ரத்தையும் மற்றும் பிரதானிகளையும் நோக்கி நன்றி தெரிவித்துக் கொண்டது.

"அல்ஹம்து லில்லாஹ்! நான் என் கடமையைச் சரிவர நிறைவேற்றி விட்டேன். ஆண்டவனே, நீ இதை ஏற்றுக் கொண்டு அருள் புரிவாயாக ஆமீன்'' என்று துஆ இறைஞ்சினர்.

அப்போது அரசர் யாரோ தன் சட்டையின் ஓரத்தை பின் புறமாக மெல்ல இழுப்பதை யுணர்ந்து "யார் அது?" என்று திரும்பிப் பார்த்தார். திரும்பியதும் அவருக்கு திடீரென கண் பார்வை வந்து விட்டது. அந்தப் பெண்மான் தான், தன் துணியைப் பிடித்து இழுத்ததென்பதை அறிந்து அதைத் தடவிக் கொடுத்து அன்பு செலுத்தினர்.

அப்போது சிறு மான் குட்டி "அம்மே" என்று கத்தியது. அதன் கத்தும் சப்தமும் அரசர் காதில் கணீரென ஒலித்துக் கேட்டது.

"என்ன ஆச்சரியம்! எனக்குக் கண் பார்வையும் தெரிகிறதே; காதும் கேட்கிறதே. யா அல்லாஹ், எல்லாம் உன்னுடைய கருணை தான்; உன்னுடைய அருட் கொடைதான். உன்னையல்லால், வேறு யார் எங்கள் குறைகளை யெல்லாம் போக்க முடியும்?" என்று பிரார்த்தித்து, ஷுக்ரு செய்தார்.

அப்போது அந்த மகானுகிய ஹஜ்ரத் அரசரையும் பிரதானிகளை யும் நோக்கி "மக்களே, பார்த்தீர்களா? நியாயம் வழங்குவதே தன் கடமை யென்று கடனாற்றி வந்த நம் அரசருக்கு, அல்லாஹு தஆலா அருள் புரிந்து கஷ்டங்களை (குருடு, செவிட்டுத் தன்மை களை) போக்கியதை. நீங்கள் பிற ஜனங்கள் மீதும், பிற உயிர் பிராணிகள் மீதும் அனபும் கருணையும் புரிந்தால், அல்லாஹு தஆலா உங்கள் கஷ்டங்களைப் போக்கி அருள் புரிந்து ரஹ்மத்துச் செய்வான்" என்று இதோபதேசம் செய்தார்

மானும் மான் குட்டியும் காட்டிற்குச் சென்றன. எல்லோரும் தத்தம் இடம் ஏகினர். வஸ்ஸலாம்.

ஹஜ்ரத் 'க்வாஜா' முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்–மஆலி சாஹிப் (பாகவி)

28—ம் பாகம்

ஹஜ்ரத் அவர்களின் ஞானோபதேசங்கள்

அல் ஆரிபு பில்லாஹ் ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், தமது பல்லாயிரக் கணக்கான முரீதீன்கள் என்னும் சிஷ்யகோடிகளுக்கு ஞான வழிகாட்டி, ஈடேற்றத்தில் அழைத்துச் சென்றுள்ளார்கள். ஹஜ்ரத் அவர்கள் அல்லாஹ்வைத் தொழுது தியானித்த நேரம் போக மற்ற நேரங்களிலெல்லாம், சபையில் கூடியிருக்கும் ஜனங்களுக்கு ஷரீஅத்து, தரீகத், ஹகீகத், மஃரிபத்து-ஆகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வகையிலும் நற்போதனை செய்து வந்துள்ளார்கள். அவர்கள் தம் வாழ்நாளில் மொழிந்த உரைகளும், ஆற்றிய சொற்பொழிவுகளும், தனிப்பட்ட முறையில் போதித்த ஞானச் சொற்பொழிவுகளும் ஏட்டில் அடங்காதவையாகும். ஹஜ்ரத் அவர்கள், தற்பெருமையை நாடாதவர்கள். ஆகவே, தாம் சொல்வதை யெல்லாம் எழுதி வைத்துப் பிரபல்யப் படுத்தும்படி யாரையும், ஏடும் எழுத்தாணியுமாய் நியமனம் செய்யவில்லை. எனவே, அவர்கள் திருஉபதேசம் செய்ததைக் கேட்டுப் பயனடைந்த பெரியோர்கள் ஞாபகம் வைத்துச் சொல்லிய ஞான உபதேசங்களே இங்கு இடம் பெற்றிருக்கின்றன

(குறிப்பு :- இங்கு எடுத்தெழுதப்படும் அரிய விஷயங்கள் ஹஜ்ரத் அவர்களின் அரிய சிஷ்யரான க்வாஜா பக்தியார் (ரஹ்) அவர்கள் இயற்றிய 'தலீலுல் ஆரிபீன்' என்னும் ஞான நூலிலிருந்து எடுத்தெழுதப் பட்டிருக்கிறது.)

ஆரிப் என்றால் யார்?

ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் அவர்கள், ஒருசமயம் மொழிந்தருளியதாவது :-

ஆரிப் (மெஞ்ஞானி) என்றால் யார் யெனின் :—எவர் தன்னுடைய மனம் என்னும் இச்சைகளை இக-பரம் இரு லோகத்து இன்ப சாதனங்களை விட்டும் அப்புறப் படுத்திக் கொண்டாரோ அவரேயாவர். அப்படிப் பட்டவருக்கு, ஆலமெகைப் என்னும்

பரம லோகத்திலிருந்து ஆயிரம் கோடி ஞானத் தெளிவுகளும், தஜல்லியாத் என்னும் பரம் பொருள் பாக்கியங்களும் உண்டாகும். அவர் 'ஸுலுக்' என்னும் உலக சம்பந்தமான ஆத்மார்த்த நடவடிக்கைகளில், எவருடைய உதவி சகாயத்தையும் தாக்ஷண்யத்தையும் விரும்ப மாட்டார்.

ஞானியின் மூன்று லக்ஷணங்கள்

ஆரிப் என்னும் மெஞ்ஞானிக்கு மூன்று வகை அடையாளங்கள் உண்டு. அவை அந்தரங்கமான லக்ஷணங்களாகும். அவை (1) ஹைபத் என்னும் திடுக்கம், (2) தஃஜீம் என்னும் பக்தி ஒழுக்கம். (3) ஹயா என்னும் தன்மானம்.

முதலாவது நிலையில் அவர் தன்னுடைய பாபங்களையும் தவறுகளையும் பிறர்க்கு தன்னால் நேரிட்டிருக்கும் இடைஞ்சல்களை நினைத்து திடுக்கிட்டுப் பயந்து எப்போதும் நாணி, வெட்கப்பட்டுப் பேணிக்கொண்டே இருப்பார்.

இரண்டாவது நிலையில் அவர், இரவும் பகலும் நேரத்தை வீணில் போக்காமல்படி அல்லாஹ்வைப் பெருமைப் படுத்தும் தஃஜீம் முறையில் தொழுது வணங்கிக் கொண்டு, உத்தமர்களுக்கு நல்லூழியம் புரிந்து கொண்டும் இருப்பார்.

மூன்றாவது நிலையில், அல்லாஹு தஆலாவுடைய ஜல்வத், கல்வத் என்னும் திருத் தோற்றங்களைத் தவிர்த்து வேறு எவர்மீதும் கண்ணோட்டம் செலுத்த மாட்டார். ஒரு புது மணப்பெண் தன் மணாளனைத் தவிர அன்னியர்களைப் பார்ப்பதற்கு வெட்கப் படுவதைப் போல் 'ஹயா' உடையவராக இருப்பார்.

முஃமின்களின் மிஃராஜ்

இஸ்லாமிய ஷரீஅத்தின் முக்கியப் பெரும் கடமையான தொழுகையைப் பற்றி ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் (ரஹ்) அவர்கள் வற்புறுத்தி சிறப்பித்துக் கூறி யிருப்பதாவது :—

தொழுகையானது மூஃமினான ஜனங்களுக்கு ஒரு மிஃராஜ் போன்றதாகும். உலக வாழ்க்கையில் மனிதர்களுக்கு, தொழுகையில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் மன நிம்மதி (ஆத்மசாந்தி) இத்மீனான் கல்பு என்னும் பதவியானது, அடியான் அல்லாஹு தஆலாவுடைய திருச் சன்னிதானத்தில் போய் உன்னதப் பதவி (மிஃராஜ் உடைய மர்தபா) அடைந்தால் உண்டாகுமே அப்படிப் பட்ட சாந்தி நிலைக்கு சமானமானதாகும். ஆகவே இதை மிஃராஜுல் மூமினீன் என்று சொல்லுகிறார்கள்.

இரண்டு மலக்குகள்

இன்னெரு சமயம் ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் (ரஹ்) அவர்கள் கூறி யிருப்பதாவது :-

இரண்டு மலக்குகள், தினமும் வானத்திலிருந்து அடியானை நோக்கி இறங்கி வருகிறார்கள். அதில் ஒருவர் அடியானைப் பார்த்து விட்டு, "எவனொருவன் அல்லாஹு தஆலாவுடைய பர்லான கடமை என்னும் பொறுப்பை கைநழுவ விட்டு விட்டானே அவன், அல்லாஹு தஆலாவுடைய ஜமானத் என்னும் அமானத்தை விட்டும் வெளிப்பட்டு மோசடி செய்தவனுவான்" என்று சொல்லுவார்.

அதைக்கேட்டு மற்றொரு மலக்கு என்ன சொல்லுவாரென்றால் :- "எவனொருவன் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய அமானத்துப் பொறுப்பாகிய ஸுன்னத்தான காரியத்தைத் தட்டிக் கழித்து விட்டானே அவன் ரஸூலுல்லாஹ் உடைய அமானத்தை மோசம் செய்து விட்டவனுவான். இப்படி சுன்னத்தான நற் கருமங்களை கைநழுவ விட்டவனுக்கு, உலகம் முடிந்து கேள்வி கணக்கு கேட்கப்படும் கியாமத்து நாளில், நபியின் ஷபாஅத்து என்னும் சிபாரிஷ், ஆண்டவனிடம் கிடைக்கமாட்டாது" என்று சொல்லுவார்.

ஐந்துநேரத் தொழுகை

இன்னெரு சமயம், ஒரு முரீதுக்கு ஹஜ்ரத் க்வாஜா சாஹிப் (ரஹ்) அவர்கள், ஐந்து நேரத் தொழுகையின் பெருமையைப் பற்றி கூறியதாவது :—

எவரொருவர் தினமும் ஐந்துநேரத் தொழுகைகளை நியமமாகவும் விருப்பத்துடனும் மனம் லயித்து தொழுது வருவாரேயானுல் கியாமத்து நாளில் அத்தத் தொழுகையானது அவருக்கு பாதுகாப்பாகவும் கேடயமாகவும் இருந்து, நரகலோகத்தை விட்டும் காப்பாற்றும் என்பதாகும்.

ஸுப்ஹுத் தொழுகை

ஐங்காலத் தொழுகைகளில் மனதுக்கு நிம்மதி அளிப்பது ஸுப்ஹு நேரத் தொழுகையாகும். எவரேனு மொருவர், காலை நேர ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு, அதே இடத்தில் சூரியன் நன்கு உதயமாகும் வரைக்கும் உட்கார்ந்து ஓதிக்கொண்டிருந்து, 'ஸலாத்துல் இஷ்ராக்' என்னும் நபில் தொழுகையையும் தொழுது கொள்வாரானுல், அல்லாஹு தஆலா அந்த நல்லடியானுக்கு 70 ஆயிரம் பேர் தொழுது வணங்கிய தவாபை (நன்மையை)க் கொடுத்தருள்வான்' என்பதாகும்.

ஞானவான்களின் அரிய வணக்கம்

ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், அஹ்லே ஸுலூக் என்னும் ஞானவான்களின் ஒழுக்கம்-இபாதத் இவைபற்றிக் கூறியதாவது :—

அஹ்லே ஸுலூக்காகிய ஞானவான்கள், ஐந்து விஷயங்களைப் பார்ப்பது (பேணுவது) கூட, அவர்களுக்கு இபாதத்தைப் போன்ற தன்மை யுடையதாகும். அவையாவன :—

(1) தன் பெற்றோர்களைப் பார்ப்பது, அவர்களுக்குப் பணி விடை செய்வது; அல்லது அவர்கள் சொல்வதுபோல் கேட்டு நடப்பது.

(2) குர்ஆன் ஷரீபைப் பார்ப்பது; குர்ஆனைப் பார்ப்பது கொண்டு அதை ஓதவேண்டும் என்ற ஆவல் ஏற்படும். அதை ஓதுவதுகொண்டு அதன்படி அமல் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் உண்டாகும்.

(3) உலமாயே ரப்பானி என்னும் பெரியோர்களையும், உலமாக் களையும், நல்லோர்களையும் பார்ப்பது. அவர்களின் தரிசனத்தால் நல்லுபதேசம் கிடைக்கும்; நற்குண நல்லொழுக்கம் உண்டாகும். அவர்களின் சகவாச பாக்கியம் கிடைக்கும்.

(4) கஃபத்துல்லாஹ் ஆலயத்தைப் பார்ப்பது. ஆதிபூர்வமான ஏகதெய்வ வணக்க இல்லமாகிய கஃபத்துல்லாஹ்வை, கண்ணால் கண்டு தரிசிப்பதும்கூட புண்ணியமான நற் கருமமாகும். (ஹஜ்ஜு செய்பவர்களுக்கு இந்த பாக்கியம் கட்டாயம் கிடைக்கும்).

(5) தன்னுடைய ஞான குருவாகிய பீரே-தரீகத்தைக் கண்டு தரிசிப்பது. (முரீதீன்கள், தங்கள் ஷெய்குமாரைக் காணச் செல்லு வதும், கண்டு தரிசிப்பதும், அவர்கள் கட்டளைப்படி நடந்து கொள் வதும், அவர்கள் போதனைப்படி அமல் செய்வதும் கட்டாயக் கடமையாகும். ஒரு முரீது பலநாள் வரை தன்னுடைய பீரே காமிலைப் பார்க்காமல் இருந்து விடுவது மகா அறுவறுக்கத்தக்க செயலாகும். தன்னுடைய பீரின் திருச்சமுகத்தில் பக்தி விசுவாசத் தோடு வீற்றிருக்கும் சிஷ்யருக்கு, அந்தப் பீருடைய பைஜ் என்னும் பாக்கியம் கட்டாயம் உண்டாகும். முடியுமானால் தினமும் ஞான குருவைத் தரிசிக்க வேண்டும். முடியாவிட்டால் வாரத்துக்கு ஒரு முறை தரிசிக்க வேண்டும். அல்லது மாதத்துக்கு ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும். அதுவும் முடியாதவர் அதிருஷ்ட பாக்கியம் குறைந்தவரே யாவார்.)

ஞானவழி நடப்போரின் நற் பதவிகள்

ஹஜ்ரத் க்வாஜா ஸாஹிப் அவர்கள் கூறி யிருப்பதாவது :—

'ஸுலூக்' என்னும் ஞான மார்க்க நடப்பு முறைகளில் 100-நற் பதவிகள் உண்டு. அந்த நூறு பதவிகளில் எழுபது பதவிகளைக் கடந்து பரிபக்குவம் அடைந்தால்தான் கஷ்பு-கராமத்துகள் என் னும் ஞானத் தெளிவும், அற்புத ஆத்ம சக்தியும் உண்டாகும்.

அப்படி 100 பதவிகளில் 70 பதவிகளை ஒரு ஞானவான் கடந்து சென்று, அற்புத சக்திகளாகிய கஷ்பு-கராமத்தை அடையப் பெற் றிருந்தும் அவர் அதை ஜனங்களிடம் வெளிப்படுத்திக் கொள்ளா மல் அடக்கமாக இருந்தால், அவர் மிச்சமுள்ள 30-பதவிகளையும் அதிக சீக்கிரத்தில் அடையப் பெற்று இன்ஸானே காமில் ஆகி விடுவார். ஆகையால், மெஞ்ஞானி தன்னுடைய ஆற்றல் அறிவு களை வெளிப்படுத்திக் காட்டாமல் அடக்க ஒடுக்கமாய் இருக்க 100 பதவிகளையும் கடக்க வேண்டும்.

இவ்வாறு பண்டைப் பெரியார்களான மஷாயிகுமார்கள் சொல்லி யிருக்கிறார்கள் :-

எம்முடைய சிஷ்தியா தரீகாவில் நாங்கள் மேற்கூறியதில் 15 பதவிகளை ஏற்படுத்தி யிருக்கிறோம். ஒருவர் இதில் 5 பதவி களை அடைந்தாலும் அவர் 15 பதவிகளை அடைந்தவர் போலாவார். பதினைந்து பதவிகளையும் அடைந்தவர் மேற்கூறிய 100 பதவிகளை யும் கடந்த காமிலுக்கு ஒப்பானவராக இருப்பார்.

குறிப்பு: இக்காலை சில முரீதின்கள், தமது ஷெய்குமார் களிடம் கொஞ்சம் ஞான போதனைகளைப் பெற்றுக் கொண்டதும் வெளியே வந்து, தாம் மிகப் பெரும் ஞானப் பதவிகளைப் பெற்று விட்டதாகப் பகட்டிக் கொள்கின்றனர். தமது ஷெய்கைப் போலவே தொப்பியும் ஜுப்பாவும், அணிந்து கையில் அஸா கோலும், தஸ் பீஹும் பிடித்து படாடோபமாய்த் திரிகின்றனர். தங்களுக்குப் போதிக்கப்பட்டதை அமல் செய்யாமல், அதை பிறருக்கும் போதிக்கத் தொடங்கி விடுகின்றனர்.

ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி அவர்கள் அஹ்லே ஸுலுக்குகள், அடக்க ஒடுக்கமாய் இருந்து, 100 பதவிகளை (படித்தரங்களை) கடந்து போக வேண்டுமென்றும், அப்படிச் செய்தால்தான் இன்ஸானே காமில் ஆக முடியுமென்றும் கூறி யிருக்கிறார்கள். இபாதத்தினாலும், முஷாஹதா, முராகபாவினாலும் இரண்டொரு மன்ஜில்களைக் கடந்து செல்லாதவர்கள்கூட தங்களை பெரிய அஹ்லே தரீகத் என்று கூறிக்கொண்டு, ஊர் ஊராய் ஞானோபதேசம் செய்து கொண்டு திரிகிறார்கள் அந்தோ!

(தொடரும்)

நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீது

புதிய மூன்றும் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானுகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக் கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஔலியாக்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9—60

கிடைக்குமிடம்:

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

யாஸ்மீன்

தொடர் நாவல்

"ஏ. ஆர். கமால்"

3

யாஸ்மீன் தற்கொலை.

ஹிலாகுகானைக் கொல்ல அரண்மனையில் செய்த சூழ்ச்சி பலிக்காததைக் கொண்டும், சதியில் சம்மந்தப்பட்ட எல்லோரையும் தூக்கில் போட்டார்கள். ஆனால் இச்சதிக்கே காரணக்கர்த்தாவான கப்லாகான் மட்டும் யாதொரு தண்டனைக்கும் ஆளாகாமல் சுகமாக இருப்பதை முன்னிட்டும், தலைமறைவாக ஓடி விட்டிருந்த மஹ்மூதுக்குக் கப்லாகான் மீது சந்தேகம் எழுந்தது. கப்லாகானுக்குத் தந்தை பாசம் மேலிட்டு விட்டதால் குறிப்பிட்ட நேரத்தில் தன் உறுதிமொழிகளுக்கு மாறு செய்ததும் அல்லாமல், ஹிலாகுகானைக் கொல்ல சதி நடப்பதாயும் அதை தான் தற்செயலாக அறிந்ததாகவும் ஒன்றும் தெரியா மழலையாக மாறி திட்டமிட்டிருந்த விஷயங்களை எல்லாம் தன் தந்தைக்குத் தெரிவித்து விட்டான் கப்லாகான் என்று எண்ணினான் ஓடிவிட்ட மஹ்மூத். இந்த எண்ணத்தின் பயனாக மஹ்மூதுக்குக் கப்லாகானின் மீது வெறுப்பு தட்டி அவனைப் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, சதி விஷயங்கள் குறிப்பிட்டுக் கப்லாகான் தனக்கு எழுதிய அரசாங்க முத்திரை பதித்த கடிதத்தோடு அரண்மனைக்கு வந்து, ஹிலாகுகானிடம் அக்கடிதத்தைக் கொடுத்து நடந்த சதி சூழ்ச்சிகளுக்கெல்லாம் காரணம் கப்லாகான்தான் என்பதைச் சொல்லாமல் சொன்னான் மஹ்மூத். இவனுக்குக் கப்லாகான் மீது சந்தேகம். கப்லாகானுக்கு யாஸ்மீன் மீது சந்தேகம்.

ஹிலாகுகான் மரணமானதும் கப்லாகான் மன்னன் ஆனான். ஹிலாகுகானின் சவத்தை அக்காலை தாத்தாரிகளின் வழக்கப்படி நாற்பது நாட்கள் வரை பொது மக்கள் வெளி நாட்டு பிரதிநிதிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டபின் அடக்கம் செய்தனர்.

கப்லாகான் சபல புத்தியுள்ளவன். சில மாதங்கள் சென்றபின் மீண்டும் அவனுக்கு யாஸ்மீன் மீது ஆசை பிறந்தது. அவன் அதை அடக்க பகீரத பிரயத்னம் எல்லாம் செய்து பார்த்தான். யாஸ்மீனின் ஆசை அவன் மனதை விட்டு அகலவில்லை. யாஸ்

மீனின் நினைவை மறக்க அவன் எவ்வளவு முயற்சிக்கிருனே அவ்வளவு அதிகமாக அவள் மதிவதனம் அவன் மனக் கண்ணில் ஆடத் தொடங்குகிறது. இறுதியில் கப்லாகான் தன் மன இச்சைக்கு அடிமையாகி யாஸ்மீனுக்கு விடுதலை அளித்து அரண்மனையில் இருக்கச் செய்தான்.

யாஸ்மீனிடம் கோபத்தை அடக்கும் சக்தியும், கஷ்டங்கள் நேரும்போது பொறுமையும் சகிப்பு தன்மையும் இருக்கிறபடியால் செய்யாத குற்றத்திற்குத் தண்டனை தந்த கப்லாகானைக் கண்டும் அவள் கோபப்படவில்லை. அதற்கு மாருக அனுதாபப்பட்டாள். ஒரு முட்டாளின் செய்கை கண்டு ஒரு அறிவாளி அவன் மீது எப்படி இரக்கமும் அனுதாபமும் படுவானே அதேபோல் தான் கப்லாகானைக் கண்டு யாஸ்மீன் இரக்கமும் அனுதாபமும் பட்டாள்.

"யாஸ்மீன்! சென்றது எல்லாம் மறந்துவிடு. நீ செய்த குற்றங்களை எல்லாம் நான் மன்னித்து விடுகிறேன். அதோடு நீ ஒரு வார்த்தை சம்மதம் என்று சொன்னால் போதும். உன்னை மணந்து இக்காட்டின் மஹாராணியாக செய்கிறேன்!" கப்லாகான் புதிர் எதுவும் போடாமல் நேரடியாக யாஸ்மீனிடம் கூறினன்.

"மஹாராணியின் பதவிக்காக தன் மாசற்ற மதமான தூய இஸ்லாமைத் துறக்கக் கூடிய தோகை அல்ல நான்!" யாஸ்மீன் கூறினள்.

"இரு மனமும் கலந்தால் திருமணம் தானே! அப்படி இருக்க இங்கு மதமென்ற பேச்சுக்கே இடமேது?"

"இரு மனம் கலந்தால்தானே திருமணம்! உன் மனதோடு என் மனம் கலக்கவில்லையே! எப்படி திருமணம் செய்து கொள்ள முடியும்?"

"இதுவரை கலக்கவில்லை என்ருல் இப்போது என் மனதோடு உன் மனதைக் கலந்து விடு. அதில் தவறு என்ன?"

"உன் மனதோடு என் மனம் கலக்க என் உள்ளம் மறுக்கிறதே எப்படி கலக்க முடியும்?"

"அது ஏன் மறுக்கிறது?"

"எண்ணெய்யும் தண்ணீரும் ஒன்ருகக் கலந்து உறவாட சம்மதிக்குமா? சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒன்ருக முடியுமா?? புலியும் பூனையும் கணவன் மனைவியாக வாழ முடியுமா???" யாஸ்மீன் கேள்வியாலேயே தன் வெறுப்பை வெளிப்படுத்தினள்.

"நீ சொன்னவைகள் எல்லாம் ஒன்ருக சேர்ந்தாலும் சேரா விட்டாலும் அதனல் எனக்கொன்றும் லாபமோ நஷ்டமோ கிடை

யாது. ஆனால் நீ மட்டும் கட்டாயம் என்னுடன் சேர்ந்தே தீர வேண்டும்!'' கப்லாகான் முடிவாக கூறினான்.

''என் உடலில் உயிர் இருக்கும்வரை அவ்விதமாக ஒரு நாளும் நடக்காது என திடமாக உறுதி அளிக்கிறேன்''

''யாஸ்மீன்! உன்னுடைய பிடிவாத குணம் உன்னை எங்கே கொண்டு போகும் என்பதை உணர்ந்தாயா?''

''ஒன்று பாதாள சிறை மற்றொன்று சொர்க்க லோகம். இந்த இரண்டு இடங்களைத் தவிர வேறு எங்கும் கொண்டு போகாது என நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்''

''யாஸ்மீன்! நிதானித்து ஆராய்ந்து பார்! நான் உன் அழகில் மயங்கி உன் மீது காதல் கொண்டு என் உயிரை உன் மீது வைத்து இருக்கிறேன். உன் மீது அளவில்லா அன்பும் ஆசையுங் கொண்டுள்ள என்னை நிராகரிக்கிறாயே! என்னைப் போல் உன் மீது ஆசை கொண்டு அன்பு செலுத்தக்கூடியவன் என்னையின்றி வேறொருவன் உனக்குக் கணவனாக கிடைப்பானா?''

''கிடைத்தாலும் என் பாக்கியம்! கிடைக்கா விட்டாலும் அது என் பிராப்தம்!! அந்தக் கவலை உங்களுக்கு எதற்கு?''

''உன் நலனை என் நலனாகக் கருதும் பொருட்டால்தான் உன் நன்மையை உத்தேசித்து இவ்வளவும் கூறுகிறேன்!'' கப்லாகானின் சுருதி தாழ்ந்த அதுவும் யாசம் கேட்கும் வகையில் இறங்கியது.

''உண்மையிலேயே நீ என் நலனைக் கருதுவதாக இருந்தால் என் இஷ்டப்படியே விட்டுவிட வேண்டும். தன்னையே மணந்து கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது!'' யாஸ்மீன் கூறினாள்.

''யாஸ்மீன்! நான் உன் மீது கொண்டுள்ள தீராக் காதலால் பைத்தியக்காரனாகி உன் மனம் நோகக் கூடாது என்றும் உன் மனம் இளகி சம்மதம் தருவாய் என்ற நோக்கத்தால் இம்மானிலத்திற்கே மன்னனான நான் பிச்சைகாரனைவிட கேவலமான நிலையில் உன்னிடம் வேண்டுகோள் விட்டும், அழகின் மமதையால் என்னைத் துச்சமாக மதித்துப் புறக்கணிக்கிறாய்! உன் போன்ற ஒரு பெண்ணால் எனக்கு ஏற்படும் இந்த அவமானத்தை நான் ஒரு நாளும் சகிக்க முடியாது! இறுதியாகக் கேட்கிறேன். நீ என்னை மணக்க போகிறாயா இல்லையா?'' தாழ்ந்திருந்த கப்லாகானின் சுருதி ஒரு நிமிஷத்தில் திடீரென உயர்ந்து கனல் கக்கும் வார்த்தைகளாக உதிர்ந்தது. இப்போது யாஸ்மீன் தன்னை மணந்து கொள்ள சம்மதித்து விடுவாள் என எதிர் பார்த்தான்.

''கப்லாகான்! நீ மன்னன் என்பதை முன்னிட்டு இதுவரை உனக்கு மரியாதை செலுத்தி வந்தேன். உன்னைப் பெயர் கொண்டு

187088

அழைப்பதும் பாபம் என்று கருதி வந்தேன். ஆனால் இப்போது உன்னை நேரடியாகவே பெயர் கொண்டு அழைக்கிறேன். மற்ற மங்கைகளைப்போல உன் பயமுறுத்தலுக்கும் மிரட்டலுக்கும் பயந்து மனக் கலக்கம் அடையும் அபலை அல்ல நான். உண்மையை எதிர்த்துப் போராடிய இஸ்லாமிய வீரர்களின் புனித இரத்தத்தால் பிறந்தவள் நான். எந்தக் கஷ்டமும் நஷ்டமும் என் மன உறுதியை ஒரு எள்ளு பிரமாணமும் அசைக்க முடியாது. இன்பம் துன்பம் யாவும் இறைவன் புறத்தால் வருகிறது என்று விசுவாசம் கொண்டு பொறுமையைக் கடைபிடித்து எந்நேரமும் குதூகலமடையும் முஸ்லிம் சமுதாயத்தில் உதித்த மாமணியான நான் உன் கோபத்தைக் கண்டு என் கண்ணியமான கருத்தையோ கைங்கரியத்தையோ கொண்டுள்ள கொள்கையையோ இழந்திட மாட்டேன். ஒரு சமயம் உன் மிரட்டலுக்கு நான் பயந்து அடிபணிந்து விடுவேன் என்று நீ எண்ணி இருந்தாயேயானால் சத்திய ஆண்டவன் மீது சத்தியமிட்டு சொல்லுகிறேன், அதில் நீ ஏமாற்றத்தையே காண்பாய்! ஆகவே நீ என் வாழ்வில் குறுக்கிடாமல், வேறொரு அழகிய தாத்தாரி மக்களிலேயே ஒரு தோகையைத் தேர்ந்தெடுத்து உன் வாழ்க்கை துணைவியாக ஏற்றுக்கொள்! இதுவே நான் இறுதியாக உனக்குச் சொல்ல வேண்டிய விஷயம்!''

எதற்கும் அஞ்சாத வீரன்கூட அஞ்சி விடக்கூடிய வகையில் யாஸ்மீன் யாதொரு பயமுமின்றி வீரகர்ஜனையாக எடுத்துரைத்தாள். இதைக்கேட்டு கப்லாகான் ஒரு சில நிமிடங்கள் வாயடைத்துப் போனான். கோபத்தால் அவன் உடல் பதறியது—கண்ணில் இருந்த காமவெறியோடு கோபக்கனலும் கலந்து விட்டபடியால் இரு கண்களும் இரத்தமாக சிவந்து விட்டது. இந்நேரத்தில் அவன் கண்ணீர் வடித்தால் அது வெறும் சாதாரண கண்ணீராக இல்லாமல் இரத்தமாகவே சொட்டக் கூடும்.

“யாஸ்மீன்! என் அதிகார தன்மையை அறிந்துதான் இது வரை நீ பேசினாயா?'' பற்களை நற நற என்று கடித்துக் கொண்டு கேட்டான் கப்லாகான்.

“அறிந்துதான் பேசினேன்! இப்போதும் பேசுகிறேன். உன் அதிகாரத்தால் நாட்டை நாசமாக்கலாம்! நாட்டு மக்களை வதைக்கலாம்! ஊரை வாங்கலாம்! உலகில் உள்ள அத்தனை இன்பங்களையும் வாங்கலாம்! அதிகார வேட்கையால் பலாத்காரம் கொண்டு பரிசுத்த பாவையர்களின் உடல்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தலாம். ஆனால் சத்தியம் ஒன்றையே குறிக்கோளாக கொண்ட சத்திய இஸ்லாமில் பிறந்த என்னைப்போன்ற ஒரு சிந்தாமணியின் உள்ளத்தை உன்னால் மட்டுமென்ன உலகிலுள்ள எந்த சக்தியாலுமே தொடமுடியாது. இது திண்ணம்!'' யாஸ்மீன் கூறினாள்.

"அதையும் நான் பார்க்கிறேன்!" என்று கூறியபடி மந்திரிகள் சிலரை அழைத்து கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யும்படி கட்டளை பிறப்பித்தான் கப்லாகான். அரசனின் ஆசையை நிராகரிக்கலாம் ஆனல் அவன் ஆணையை?

சில மணி நேரத்திற்குள் கல்யாணம் ஏற்பாடு யாவும் செய்யப் பட்டு விட்டன.

தாத்தாரிகள் வழக்கப்படி கப்லாகானுக்கும் யாஸ்மீனுக்கும் கோலாகலமாகக் கல்யாணம் நடந்தேறியது.

அன்று திருமண முதல் இரவு தன்னை உயர்ந்த ஆடைகளில் அலங்கரித்துக் கொண்டு சுமக்க முடியா சந்தோஷ சிகரத்தைச் சுமந்து கொண்டு யாஸ்மீனின் சயன அறைக்குள் பிரவேசித்தான் கப்லாகான்.

கப்லாகான் யாஸ்மீன் அருகில் சென்றதும் வீரிட்டு அலறி விட்டான். யாஸ்மீன் தன் புனிதமான கற்பைக் காத்துக் கொள் ளும் பொருட்டுத் தன் மார்பில் ஒரு கூர்மையான கத்தியைச் சொரு கிக் கொண்டு விட்டிருந்தாள். "யாஸ்மீன் தற்கொலை" செய்து கொண்டு மீளா துயில் கொண்டு விட்டபடியால் கப்லாகான் வீரிட்டு அலறியது அவளுக்குத் தெரிய நியாய மில்லை.

யாரும் மாற்றவோ மறுக்கவோ எதிர்க்கவோ முடியாத கப்லா கானின் தீர்மானம் இறுதியானது என்றால், யாஸ்மீனின் தீர்ப்பும் உறுதி வாய்ந்ததே!

கப்லாகான் தன் அதிகார ஆணவத்தால் யாஸ்மீன் உடல் மீது பலாத்காரமாக ஆதிக்கம் செலுத்த முற்பட்டான். ஆனல் அதற்கு முன் கண்ணியமான கற்பைக் காத்துக் கொள்ள தற்கொலை செய்து கொண்டாள் யாஸ்மீன். அவள் கூறியபடி அதிகார அகங்காரத் தால் பாவையர்களின் உடலைத் தொட முடிந்தாலும் அவர்கள் உள்ளங்களைத் தொட முடியாது என்பன உண்மை அன்றோ?

வாழ்க யாஸ்மீன் நாமம்.

முற்றிற்று.

கஸஸுல் அன்பியா

1960-வது வருஷத்திய திருத்தி யமைக்கப்பட்ட பதிப்பு.

நபிமார்களுடைய சரித்திரங்கள் அடங்கியது

இதில் முதலாவது அல்லாஹு தஆலா ஆதியாய் படைத்த படைப்புகளைப் பற்றியும், 1-வது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், 2-வது ஷீது அலைஹிஸ்ஸலாம், 3-வது இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம், 4-வது ஹாறூத் மாறூத் தென்னும் இரண்டு மலக்குகள், 5-வது நூஹ் அலைஹிஸ்ஸலாம், 6-வது ஹூது அலைஹிஸ்ஸலாம், 7-வது ஷத்தாது கட்டின இரமதாத்துல் இமாதென்கிற சுவர்க்கம், 8-வது ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம், 9-வது இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம், 10-வது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், 11-வது இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், 12-வது யஃகூபு அலைஹிஸ்ஸலாம், 13-வது யூஸுப் அலைஹிஸ்ஸலாம், 14-வது ஐயூபு அலைஹிஸ்ஸலாம், 15-வது ஸில்கிப்லி அலைஹிஸ்ஸலாம், 16-வது ஷுஐபு அலைஹிஸ்ஸலாம், 17-வது மூஸா அலைஹிஸ்ஸலாம், 18-வது கிலுறு அலைஹிஸ்ஸலாம், 19-வது இல்யாஸ் அலைஹிஸ்ஸலாம், 20-வது அல்யஸஉ அலைஹிஸ்ஸலாம், 21-வது அஷ்மவீல் அலைஹிஸ்ஸலாம், 22-வது தாவூத் அலைஹிஸ்ஸலாம், 23-வது ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம், 24-வது யூனுஸ் அலைஹிஸ்ஸலாம், 25-வது ஈஸா அலைஹிஸ்ஸலாம், 26-வது ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம், 27-வது யஹ்யா அலைஹிஸ்ஸலாம், 28-வது பீவி மரியம் அலைஹிஸ்ஸலாம் ஆக இவ்வளவு நபிமார்களுடைய கிஸ்ஸாக்களடங்கி யிருக்கின்றன. இந்தக் கிஸ்ஸாக்கள் யாவும் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் பட்டவைகளாகும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் வாங்கிப் படிக்க வேண்டியது அவசியம்.

கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 9–60

ஷை அறபுத் தமிழ் ரவ்லதுல் அஸ்பியா-பீ-கஸஸுல் அன்பியா முதல் பாகம் றப்பு காகிதம் கலிகோ பைண்டு ரூ. 6–00

ஷை இரண்டாவது பாகம் ரூ. 7–00

ஷை மூன்றாவது பாகம் ரூ. 5–00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

(80-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : :

: : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

முஷ்ரிக்குகளின் முடிவை எண்ணிப் பாருங்கள்.

(அல்லாஹ்வை நிராகரித்த) முன்கிர் (முஷ்ரிக்)களை எண்ணிப் பாருங்கள்; அவர்கள் வசித்த அவர்களின் (அழிந்துபோன) ஊர்களைப் போய் சுற்றிப் பார்க்கவில்லையா நீங்கள்? அவர்களின் முடிவு காலம் யாதாயிற்றென்பதையும் (நீங்கள் ஆராய்ந்து பார்க்கவில்லையா?) இவர்கள் உங்கள் காலத்துக்கு முன்னிருந்தவர்களாவர். அன்னவர்கள், புஜபலத்தாலும் (செல்வத்தாலும்) மேன்பட்டவர்களா யிருந்தார்கள். கீர்த்திப் பிரதாபத்திலும் அவர்கள் அநேக அடையாளங்களை விட்டுச் சென்றிருந்தார்கள். (எல்லாவற்றையும் அவர்கள் விட்டுப் போய் விட்டனர்.) அவர்களின் பாப காரியத்துக்காக அல்லாஹு (தஆலா) அவர்களை (வேதனையாலும் அழிவாலும்) பிடித்துக் கொண்டான். அப்போது அவர்களைக் காப்பாற்றுபவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை.

(ஜுஸு: பமன் அல்லமு; ஸூரா: மூமின்; ருகூ: 3)

பள்ளிவாசலைப் பாழ்ப்படுத்துபவர் பாவிகள்.

அல்லாஹ்வுடைய (புனித இல்லமாகிய) மஸ்ஜிதுகளில் அல்லாஹ்வுடைய திருநாமத்தை (ஜனங்கள் ஜபிக்காமல்படி) தடுத்துக்கொண்டும், மஸ்ஜிதுகளைப் பாழ்ப்படுத்திக் கொண்டும் இருப்பவர்களைக் காட்டிலும் மகா கொடிய அநியாயக்காரன் வேறு யார் இருக்க முடியும்? இப்படிப்பட்டவர்கள், மஸ்ஜிதுகளுக்குள் காலடி எடுத்து வைக்கக்கூட யோக்கியதையற்றவர்களாவர். எனவே அவர்கள் பயந்து பயந்து (மெள்ள நுழைந்து) வருவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உலக வாழ்விலும் இழிவு (நாசம்) உண்டு; பிற்கால (ஆகிரத்)திலும் கொடிய வேதனை யுண்டு.

(ஜுஸு: அலிப் லாம் மீம்; ஸூரா: அல்பகரா; ருகூ: 14)

முஷ்ரிக்கான (காபிரான)வர்களை மணக்காதீர்கள்.

முஷ்ரிக்கான (காபிரான) பெண்களை (முஸ்லிம்களாகிய) நீங்கள், நிக்காஹ் செய்து கொள்ளாதீர்கள். (அதாவது) அவர்கள்

(இஸ்லாத்தில் சேர்ந்து) ஈமான் கொள்ளாதவரை (மணந்து கொள்ளாதீர்கள்). முஸ்லிமான அடிமைப்பெண், முஷ்ரிக்கான (முஸ்லிமல்லாத குடும்பப்) பெண்ணைவிட சிறந்தவளாவாள். காபிர் பெண்கள் எவ்வளவு அழகில் சிறந்தவர்களா யிருந்தாலும் சரியே (மணந்து கொள்ளாதீர்கள்). இவ்வாறே, முஸ்லிம் பெண்மணிகளும், முஷ்ரிக்கான (காபிரான) ஆண்களை நிக்காஹ் செய்து (மணந்து) கொள்ளக்கூடாது. அதாவது அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்து ஈமான் கொள்ளாத வரை நிக்காஹ் செய்து கொள்ளக் கூடாது. அவர்கள் (அழகில் சிறந்தவர்களாய்) உங்களுக்குத் திருப்தியாக இருந்தாலும் சரியே (கூடி வாழாதீர்கள்.)

(ஜுஸுு: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூ: 27)

துன்பம் நேரிடும் போது மனிதன் கொள்ளும் மனமாற்றம்.

மனிதனைவன், தன்னுடைய நன்மைக்கு வேண்டியவற்றை கேட்டுப் பிரார்த்திப்பதில் கொஞ்சமும் சோர்ந்து போவதில்லை. எனவே அவனுக்கொரு துன்பம் (முஸீபத்து) நேரிடும் போது முற்றும் மனம் சோர்ந்தவனாகி விடுகின்றான்; (மனம் முறிந்து விடுகின்றான்). அங்ஙனம் அவன் சிக்கிக் கொண்டு தவித்த துன்பத்திலிருந்து, (இறைவனாகிய) நாம் அவனை எமது ரஹ்மத் (என்னும் பாக்கியத்)தினால் இன்புறச் செய்து (காப்பாற்றிக்) கொள்வோமானால், அப்போது அவன் 'நான் சுயமே என் இலக்ஷியப்படி சௌக்கியமடைந்து விட்டேன். (என் முயற்சியால் நான் செல்வம் திரட்டி நல்ல நிலைமைக்கு வந்து விட்டேன்)' என்று சொல்லுகின்றான். பிற்கால (ஆகிரத்)தை மறந்து, இந்த மாதிரி (கியாமத்) முடிவு காலம் நேரிடுமென்று எதிர்பார்க்க வில்லை என்றும் (பெருமையோடு) கூறிக் கொள்வான். கியாமத்து நேரிட்டு அவன் தன் இறைவனிடம் செல்லும் போது, அவனுக்கு அங்கு நன்மை கிடைக்கு மென்பதையும் மறந்து விடுகின்றான். கியாமத்து (பலாபலன் அளிக்கும்) முடிவு நாள் உண்டென்பதை நிராகரித்தவர்களுக்கு அந்நாளில் அவர்களின் செயல்களுடைய பலாபலன் எடுத்துக் காட்டப்படும். அவர்களுக்கு அப்போது கடுமையான வேதனையும் கிடைக்கும்.

(ஜுஸுு: இலைஹியுரத்து; ஸூரா: ஹாமீம் ஸஜ்தா; ருகூ: 6)

சுகத்தில் அல்லாஹ்வை மறந்து, துன்பத்தில் பிரார்த்தனை செய்பவர்கள்.

மனிதன் எப்படிப்பட்ட (சுபாவம் உடைய)வன் என்றால் இறைவனாகிய யாம் (சுகபோக) பாக்கியங்களை (செல்வத்தை)

அளித்திருக்கும் போது, அதற்கு அவன் நன்றி செலுத்துவதில்லை; (பள்ளிவாசலை விட்டும்) ஒதுங்கிச் சென்று விடுகின்றான். அதனைப் போல் அவனுக்கு ஒரு சங்கடம் (துன்பம் வறுமை கஷ்டம்) நேரிடும் போது, (பள்ளிவாசலுக்கு வந்து) எம்மை நாடி, நீண்ட பிரார்த்தனைகள் செய்கின்றான். (இப்படி சமயோசிதமாய் இருத்தல் கூடாது; வாழ்விலும் தாழ்விலும் இறைவனுக்கு நன்றி செலுத்தி தியானித்துக் கொண்டிருக்க வேண்டும்.)

(ஜுஸு: இலைஹியுரத்து; ஸூரா: ஹாமீம் அஷ்ஸஜ்தா; ருகூ; 6)

துன்பம் வருவது உங்கள் நடத்தையின் பலாபலனே யாகும்.

(மனிதர்களே) உங்கள் மீது ஒரு துன்பம் (அல்லது சோதனை) நேரிட்டால், அது உங்களுடைய நடத்தையின் பலாபலனே என்று எண்ணிக் கொள்ளுங்கள். இயற்கையாகவே, அல்லாஹு (தஆலா) உங்களுடைய (எண்ணற்ற) குற்றங்களை மன்னித்து (விட்டுக்) கொண்டே தானிருக்கிறான். அப்படி அவன் உங்கள், பாப காரியத்துக்குத்தக்கபடி தண்டித்துக் கொண்டிருப்பதெனின், நீங்கள் அவனுடைய பூமியை விட்டு வேறெங்கும் ஓடிப் போய்விட முடியாது. அந்தத் துன்பத்தை விட்டும் தப்பித்துக் கொள்ளவும் முடியாது. (எனவே வாழ்வாயினும் சரி, தாழ்வாயினும் சரி) நீங்கள் அல்லாஹு தஆலாவுடைய ஆளுகையை விட்டும் தப்பமுடியாது. உங்களுக்கு அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாரும் உதவி செய்து விடவும் முடியாது.

(ஜுஸு: இலைஹியுரத்து, ஸூரா: அஷ்ஷூரா; ருகூ: 4)

துன்பத்தின் போது மனக்கிலேசம் கூடாது.

(இறைவனுகிய) நாம், (உலக வாழ்வில்) மனிதர்களுக்கு, எங்கள் (பாக்கியமான) ரஹ்மத்துகளைக் கொண்டு இன்பம் அடையச் செய்யும் போது, மிகவும் சந்தோஷப்பட்டு (குதூகலம் கொண்டு) விடுகிறான். பிறகு அவனுடைய துர்க்கிருத்தியங்களின் காரணமாக அதற்குப் பலாபலனுக ஒரு கஷ்டம் (துன்பம் சோதனை) நேரிடும் போது நன்றி கெட்டவனுகப் போய் விடுகின்றான். (அதாவது மனக்கிலேசப்பட்டு, வாய்க்கு வந்தவாறு, கடவுளுக்குக் கண்ணில்லையோ, என்று கூறித் திரிகின்றான்.)

(ஜுஸு: இலைஹியுரத்து; ஸூரா: அஷ்ஷூரா; ருகூ: 5)

முஸ்லிம்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்குங்கள்.

முஸ்லிம்களில் இரு பிரிவினர்கள் (ஏதேனும் வித்தியாசங்களால்) சண்டையிட்டுக் கொள்வார்களாயின், (நடுநிலைமை யுள்ளவர்

களான) நீங்கள் அவர்களிடையில் பிரவேசித்து அவர்களைச் சேர்த்து (இணங்க) வையுங்கள். அங்ஙனம் முடியாது போரிடுங்கால், அந்த இரண்டு கோஷ்டிகளில் எவர்கள் (வலிமையினால்) எளியவர்களைக் கஷ்டப்படுத்தி அநியாயம் செய்தார்களோ அவர்களுக்கு எதிரிடையாய் (எளியவர்களுக்கு உதவியாய்) நீங்கள் சண்டை போடுங்கள். அப்போது, அல்லாஹு தஆலாவுடைய கட்டளை என்ன உண்டாகிறதென்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருங்கள். அதன் பிரகாரம் நீங்கள் அவ்விருவர்க்கிடையில் நியாயத்தை நிலை நிறுத்தி, (இணக்கத்தை) உண்டாக்கி வையுங்கள். அல்லாஹு தஆலா இத்தகைய நியாயவாதிகளை (நடுநிலைமைக்காரர்களை, சத்தியத்துக்காக போராடி சமூக ஒற்றுமை உண்டாக்குபவர்களை) எப்போதும் நேசிப்பவனாகவே இருக்கின்றான்.

(ஜுஸு: இலஹியுரத்து; ஸூரா: அஷ்ஷூரா; ருகூ: 6)

போற்றி!

(வித்வான் R. M. காசிம்ஷா M. D. H.)

மலரினில் நீல வானில்
மானிலப் பொருளி லெல்லாம்
இலகிய எழிலைத் தந்த
இறையவன் கீர்த்தி போற்றி;

கலியுகம் உய்யக் கருதி
கயவர்கள் திருந்த வேண்டி
அளவிலா இடர்கள் ஏற்ற
அஹ்மது நபியே போற்றி!

187088
187088

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

மாஜிக் என்னும் ஜால வித்தை

மாஜிக், அல்லது ஜாலவித்தை செய்ய விரும்புகிறவர்கள், இந்த புஸ்தகத்தை உபயோகப் படுத்தலாம். இதில் அடங்கியுள்ள வித்தைகள்:—

கைகுட்டையைக் கிழியச் செய்து, மறுபடியும் ஒன்ருக ஆக செய்வது, எரியச் செய்வது, சாம்பலை கைகுட்டையாக மறுபடியும் ஆக்குவது, வெறும் கையிலிருந்து கைகுட்டையை வரச் செய்வது, வெள்ளைக் குட்டைச்குப்பின் இரண்டு கைகுட்டைகளை வரச் செய்வது, எல்லா கைகுட்டைகளையும் மறையச் செய்வது, மறுபடியும் எல்லா கைகுட்டைகளையும் வரச்செய்வது, தனியாக ஒரு கைகுட்டையை கையிலிருந்து மறையச்செய்வது, கைகுட்டையின், நிறங்களை மாற்றுவது, கைகுட்டையை பில்லியர்டு பந்தாக மாற்றுவது, பில்லியர்டு பந்தை ஒரு கண்ணாடி தண்ணீர் டம்ளரில் மறையச் செய்வது, பந்தின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்துவது, பந்தின் நிறத்தை மாற்றுவது, சீட்டுக் கட்டிலிருந்து நினைத்த சீட்டை தானே மேலே எழும்பச் செய்வது, பூச்செண்டிலிருந்து நினைத்த சீட்டை எழும்பச் செய்வது, நினைத்த சீட்டை புட்டிக்குமேலே தானே வரச்செய்வது, துப்பாக்கியால் நினைத்த சீட்டை கைகுட்டையில் ஒட்டச் செய்வது, மனதில் உள்ள சீட்டை வேறிடத்தில் வெளிவரச் செய்வது, சீசாவிலிருந்து நினைத்த கொடிகளை வரச்செய்வது, காகிதத்தில் உள்ள மோதிரங்களை சீசாவில் வரச்செய்வது, தொப்பியிலிருந்து முயலை வரச்செய்வது, தட்டில் போட்ட ரூபாய்கள் அதிகமாவது, வெறும் கூடையில் பூக்களைத் தருவிப்பது, கையிலுள்ள கைகுட்டை டம்ளரிலும், டம்ளரில் உள்ள முட்டை கையிலும் வரச்செய்வது, நினைத்த சீட்டை நினைத்த ஆரஞ்சு பழத்தில் வரச் செய்வது, கையிலுள்ள குருவியுடைய கூடு மாயமாய் மறைந்து விடுவது, மனதிலுள்ளதை அறிவது, மந்திரத்தினல் கால்வர் எழுதிய எண்களை கூட்டச்செய்தல், தொப்பியிலிருந்து நிறை எடைகள் நிறைய எடுப்பது, மந்திரக்கோலை அந்தரத்தில் நிறுத்துவது, தொப்பி, மேஜை, மந்திரக்கோல் இவைகளை கையில் தொட்டபடியே அந்தரத்தில் நிறுத்துவது, நாற்காலியில் உட்கார்ந்த நங்கை மறைந்து போவது, ஒருவனை சாக்கில் கட்டிப் போட்டு சீல்வைத்த பிறகு கட்டை அவிழ்க்காமல் சாக்கிலிருந்து வெளி வருதல், மனிதனுடைய தலையை அறுத்து ஒரு தட்டில் வைத்து சபையோர்க்கு காண்பித்த பிறகு மறுபடியும் தலையை வைத்து ஆளை உயிர்ப்பிக்கிறது, ஆளை உள்ளே வைத்து பூட்டின பெட்டியிலிருந்து ஆள் க்ஷணநேரத்தில் வெளிவந்து மறுபடியும் க்ஷணநேரத்தில் ஆள் பெட்டிக்குள் கட்டிய பைக்குள் செல்வது ஆகிய இவைகளும் இன்னும் கறுப்புக் கலையைப் பற்றியும் மற்றும் சில வித்தைகளும் இதில் விபரித்து இருக்கின்றன.

வித்தைகளை விபரிக்க படங்களும் அதிகமாக சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை ரூபா. 1–52

அஹ்காமுல் முஸ்லிமீன்

(ஹனபி ஷாபியீ இரு மதுஹபுகளுக்கும்
தனித்தனி புஸ்தகம்)

கலிமாக்கள், ஈமான், இஸ்லாம், உலு, முழுக்கு, ஹைலு, நிபாஸு, தண்ணீர், தயம்மம், நஜீஸு, தொழுகைகளின் வக்துகள், தொழுகைகளின் வரிசைகள், தொழுகையை விட்டவனுடைய வேதனை, தொழுகையின் பறுலுகள் தொழுகிற ஒழுங்கு, ஜமாஅத்துடன் தொழுகிற வரிசைகள், வித்று தொழுகை, கபில் தொழுகை, தருவீஹ உடைய வரிசைகள், ஜும்ஆ உடைய வரிசைகள், மையத்துடைய விஷயங்கள், ஸகாத்தின் பயான், நோன்பின் வரிசைகள் ஹஜ்ஜுடைய வரிசைகள், கபிராயகம் (ஸல்) அவர்களின் ரவுலா ஷரீபை ஸியாரத்துச் செய்கிறது ஆகிய இந்த விஷயங்களைப்பற்றி பேசும் பாடங்கள் இதில் நிறைந்திருக்கின்றன.

இவைகள் அல்லாமல் இன்னும் எண்ணற்ற விஷயங்கள் இந்த புஸ்தகத்தின் தக்மிலா என்று சொல்லப்படும் பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

ஹனபி மதுஹபிற் குரியது தமிழ்—அறபி வார்த்தைகள் அறபியிலும் சேர்க்கப்பட்டது. விலை ரூ. 1–00

ஷெ அறபுத் தமிழ் போட்டோ அச்சு கலிகோ பைண்டு ரூ. 1–80

ஷெ தமிழ் ஷாபி மதுஹபுக்குரியது—அறபி வார்த்தைகள் அறபியிலும் சேர்க்கப்பட்டது விலை ரூ. 1–00

ஷெ அறபுத் தமிழ் போட்டோ அச்சு ஷாபி மதுஹபுக்குரியது கலிகோ பைண்டு விலை ரூ. 1–80

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.